# GANANOQUE கனனொக் நகரம்

www.townofgananoque.ca




இது 1000 தீவுகளின் மத்தியில் அமைந்திருக்கும் ஒரு நகரமாகும். இந்தக் கனனொக் நகரம் கிழக்கு ஒன்ராறியோவிலுள்ள மிகப்பிரமாண்டமான நீர்முன்னரங்கு அயல்புறங்களில் ஒன்றாக மதிக்கப்படுகின்றது. இது உண்மையில் பயணிகளுக்கும், வியாபாரிகளுக்கும் மற்றும் வதிவிடவாசிகளுக்கும் சிறந்த உலகப்புகழ்பெற்ற அபிவிருத்தியடைந்துள்ள ஒரு இடமாக மாறியுள்ளது.

கனனொக் நகரம் தொடர்ச்சியாக புத்தாக்க வியாபார முயற்சிகளை விரிவுபடுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான நல்ல வாய்ப்பைத் தருகின்ற ஒரு சூழலை உருவாக்குவதற்கு முற்படுகின்றது. மிகச்சிறந்த வாழ்க்கைத் தரத்தைத் தொடர்ந்தும் மேம்படுத்துவதற்குத் தேவையான சமுதாய அபிவிருத்தியில் முதலிடுவது எமது சமூகத்தின் வளத்திற்குக் காரணமாக உள்ளது. வாழ்க்கைக்கு முக்கியமாக உள்ள ஒருவிடயம்: இடம்… இடம்… இடம்…

கனனொக் நகரம் வியாபாரத்திற்கு முக்கியமான ஓர் இடம்.

இந்தக் கனனொக் நகரம் 12 மில்லியன் நுகர்வோர் வாழும் ஒரு சந்தையின் மத்தியில் வட அமெரிக்காவின் அரைவாசிக்கும் அதிகமான கைத்தொழில்களை ஒரு நாள் பயணத்தில் அடையும் தூரத்தில் இருக்கின்றது. இங்கு இருக்கின்ற வியாபார நிலையங்கள் கனடாவின் பிரதான மூன்று நகரங்களை அண்மித்து அமைந்திருக்கின்றன. அதேநேரம் இங்கிருந்து அமெரிக்க நாட்டையும் இலகுவாகவும் விரைவாகவும் சென்றடையலாம். இந்தக் கனனொக் நகரத்தில் அதிக திறன் வாய்ந்த நிலையான ஊழியர்கள் இருக்கின்றனர். இங்குள்ள சமூகத்தின் தொழில்சார் போக்கு உற்பத்தியை நோக்கியதாக அமைந்து எஞ்சியுள்ள தொழில்கள் சுற்றுலா மற்றும் சேவை அடிப்படையில் அமைந்திருக்கின்றன. இந்தப் பிராந்தியத்தில் படிப்படியாக வளர்ந்து வருகின்ற வலிமையான ஒரு பொருளாதாரம் நிலவுகின்றது. இங்கு ஒரு புறத்தில் மிகச்சிறந்த தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் கிடைக்கும் அதேசமயம் மறுபுறத்தில் உங்களின் உற்பத்திக்கும் சேவைகளுக்கும் நல்ல சந்தை வாய்ப்புகளும் நிலவுகின்றன.

உங்களது வியாபாரத்தில் நீங்கள் முதலிடுவதற்கும் தரமான வாழ்க்கையை நீங்கள் அனுபவிப்பதற்கும் நாங்கள் உதவத் தயாராக இருக்கின்றோம்!

- மொத்தச் சனத்தொகை: 5,159 (Statistics Canada 2016 Census)
- ஜனவரி மாதச் சராசரி வெப்பநிலை: -10 °C (14 °F)
- யூலை மாதச் சராசரி வெப்பநிலை: 25 °C (77 °F)
- வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி: 22 mm மழை, 5.3” பனி
- சராசரி வீட்டு வருமானம்: $85,838
- சராசரித் தொழிலின்மை வீதம்: 5-6 %
- உயர் பாடசாலைக் கல்வி பெற்ற வயதுவந்தவர்கள்: 1,380
- கல்லூரி அல்லது பல்கலைக்கழக டிப்புளோமாப் பட்டம் பெற்ற வயதுவந்தவர்கள்: 2,030
- 2 படுக்கை அறைகள் அடங்கிய அடுக்குமாடி வதிவிடத்தின் சராசரி மாதாந்த வாடகைச் செலவு: $861
- சராசரி 3 படுக்கையறை விலகியிருப்பதாக மாளிகை: $266,361





**மேலதிகத் தகவல்கள்:**

Amanda Trafford, பொருளாதார அபிவிருத்தி முகாமையாளர்
கனனொக் நகரம்

30 King Street, Box 100; Gananoque, Ontario K7G 2T6 Canada
613-382-2149 ext. 127 / businesscoordinator@gananoque.ca


Leeds & Grenville IMMIGRATION PARTNERSHIP

www.NewcomersInfo.ca